

திருச்சி கழக முதன்மைச் செயலாளரும் மேற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான கே.என்.நேரு அவர்கள் 54 வார்டு ஆதிதிராவிடர் தெரு துலுக்காத்தம்மன் கோயில் தெரு பகுதியில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது பொதுமக்கள் திரண்டு வந்து ஆரவாரத்துடன் மகிழ்ச்சியோடு வரவேற்பு அளித்து எங்கள் ஓட்டு உதய சூரியனுக்கே என்று உறுதி அளித்தனர். அவருடன் மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன், மாவட்டத் துணைச் செயலாளர் முத்துச்செல்வம், விஜய், ஜெயராஜ், பகுதி செயலாளர் மோகன் தாஸ் மற்றும் கழக நிர்வாகிகள் காஜாமலை, விஜய், மூவேந்திரன், புஷ்ப ராஜ், ராமதாஸ், தொ.மு.ச. அமைப்பாளர் குணசேகர், சோழன், சம்பத், முத்து, பழனி, திருப்பதி, ராதாகிருஷ்ணன், கருணாமூர்த்தி உள்ளிட்ட பலர் உடன் சென்றனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் பெத்த நாயக்கன்பாளையம் பேரூர் த.வெ.க. நகர இணை செயலாளர் இளங்கோ தலைமையில் 25 பேர் அக்கட்சியில் இருந்து விலகி வடக்கு மண்டல தேர்தல் பொறுப்பாளரும், அமைச்சருமான எ.வ.வேலு முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். அப்போது கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., மத்திய மாவட்டச் செயலாளர் அமைச்சர் இரா.ராஜேந்திரன் , மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி., மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், பேரூர் செயலாளர் வெங்கடேஷன், முத்துலிங்கம், மகேஷ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



மதச்சார்பற்ற முற்போக்கு வெற்றிக் கூட்டணியின் பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் டாக்டர்.ஜெயலட்சுமியை ஆதரித்து கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா பெரம்பலூர் நகர பொதுமக்களிடம் வாக்குகள் சேகரித்தார். இக்கூட்டத்தில் பெரம்பலூர் மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்கள், கழக நிர்வாகிகள், செயல்வீரர்கள் பெருந்திரளாகக் கலந்துகொண்டனர்.




கும்பகோணம் சோழன் போக்குவரத்து கழகத்தின் நுழைவாயிலில் உள்ள அறிவால் எழுந்து உரிமைக்காக போராட கற்றுத்தந்த மகத்தான மனிதர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளில் அவரது சிலைக்கும், மற்றும் தந்தை பெரியார் சிலைக்கும் நமது கும்பகோணம் வெற்றி வேட்பாளர் சாக்கோட்டை க அன்பழகன் எம்.எல்.ஏ மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் ஒன்றிய செயலாளர்கள் டி.கணேசன், ஜெ.சுதாகர், சி.வி.அண்ணாதுரை மற்றும் தொ.மு.ச. நிர்வாகி சுரேஷ், சங்கர் கலந்துகொண்டனர்.



"ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள், நீ தேடி வந்த கோழையுள்ள நாடு இதுவல்லவே! என தமிழ்க் கொடியேந்தி , தனது 92 வயது வரை தமிழ் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் உற்ற தோழர்களாய் இருந்த இஸ்லாமியர்களின் நினைவை போற்றியவனாய் திருவாரூர் கொடிக்கால் பாளையம் முகைதீன் பள்ளிவாசலில் இஸ்லாமியர்களை சந்தித்து பூண்டி. கே. கலைவாணன் வாக்கு சேகரித்தார்.

## களத்தில் இளைஞர் அணி

### மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணி நிர்வாகிகள் வீடு வீடாகச் சென்று, வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.




திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதி,
திருப்பூர் மத்திய மாவட்டம்




பவானிசாகர் சட்டமன்றத் தொகுதி,
ஈரோடு வடக்கு மாவட்டம்.




பழனி சட்டமன்றத் தொகுதி,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.




பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதி,
கன்னியாகுமரி மேற்கு மாவட்டம்.




போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதி,
தேனி வடக்கு மாவட்டம்




ஓமலூர் சட்டமன்றத் தொகுதி,
சேலம் மத்திய மாவட்டம்.




திருவரங்கம் சட்டமன்றத் தொகுதி,
திருச்சி மத்திய மாவட்டம்.




ஒரத்தநாடு சட்டமன்றத் தொகுதி,
தஞ்சாவூர் மத்திய மாவட்டம்.




மாதவரம் சட்டமன்றத் தொகுதி,
சென்னை வடகிழக்கு மாவட்டம்